முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. (குறுக்கீடு) அது அவர்களைப் பொறுத்தது. நான் வற்புறுத்த முடியாது. தவறானதுதான். அன்றைக்கு அவர்கள் பேசியது தவறானதுதான் என்று நான் சொல்லிவிட்டேன். மன்னிப்புக் கேட்பதும், கேட்காததும் அவர்களைப் பொறுத்தது. (குறுக்கீடு)

திரு. ஆர். சிங்காரம்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** முடியாது. அதெல்லாம் தவறு. கண்டிக்கத்தக்கது. (குறுக்கீடு) கண்டிக்கத்தக்கது. அதெல்லாம் வேண்டாம். (கூச்சல்-குழப்பம்) வேண்டாம். ** இங்கே இடமில்லை. (கூச்சல்-குழப்பம்) திரு. ஈஸ்வரன், இதெல்லாம் சரியில்லை. அதெல்லாம் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. **இங்கே இருக்கக் கூடாது.

திரு. ச. அழகிரி: இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இருக்கலாம் என்று நீங்கள் சொல்லலாம். நான் அனுமதிக்கவில்லை. அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். ஆனால் திரு. அழகிரி அன்றைக்குப் பேசிய கூற்று தவறு என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம்: ஓய மாட்டோம், ஒழிய மாட்டோம். மன்னிப்புக் கேட்கின்ற வரையில் ஓய மாட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

5. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. இரா. அப்பு நடேசன், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். அடுத்ததற்குப் போய் ஆகிவிட்டது. (குறுக்கீடு) அடுத்த பிரச்சினைக்குப் போய் ஆகிவிட்டது. உட்காருங்கள்.

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**

1995 ஏப்ரல் 10]

கல்வராயன் மலைவாழ் மக்கள் மின்விநியோகமின்மையால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. இராமசுவாமி.

முற்பகல் 11-20

***திரு. சி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்வராயன் மலையில் கடந்த மூன்று மாதங்களாக மின் விநியோகம் இல்லாமல் தெரு விளக்குகள் எரியாமல் மலைவாழ் மக்கள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள 104 கிராமங்களில் 29 கிராமங்களுக்கு சூரியசக்தி தெருவிளக்குகளும், 8 கிராமங்களுக்கு டீசல் மின்சாரம் மூலம் தெரு விளக்குகளும் மீதமுள்ள 67 கிராமங்களுக்கு மரபுவழி மின்சார தெருவிளக்குகளும் (Street lights by Conventional electrification) போடப்பட்டுள்ளன. மேற்கண்ட அனைத்துவிதத் தெருவிளக்குகளும் சம்பந்தப்பட்ட ஊராட்சியால் பராமரிக்கப்படுகின்றன.

மரபுவழி மின்சாரம் வழங்கப்படும் 67 கிராமங்களுக்கும் சங்கராபுரம் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. சில நேரங்களில் தவிர்க்க முடியாத காரணங்களினால், சிறிது நேரத்திற்கு ஏற்படும் மின்தடையும் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுகிறது. மற்ற நேரங்களில் தங்குதடையின்றி மின்சாரம் சீராக விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும் பழுதுபட்டு எரியாமல் உள்ள தெருவிளக்குகளை எரியவைப்பதற்கு தேவையான பல்புகள், சோக்குகள், ஸ்டார்டர்கள் போன்றவற்றை ஊராட்சி அலுவலர் கொடுத்தவுடன், மின்வாரியம் அந்த தெருவிளக்குகள் எரிய ஆவன செய்யும்.

[*1995 ஏப்ரல் 10*

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். 67 கிராமங்களுக்கு மரபுவழி மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 3 மாத காலமாக மின்சார சப்ளை இல்லாமல் புதுப்பட்டு, புதுப்பாலப்பட்டு, கள்ளிப்பட்டு, தும்பை, பாச்சேரி, மோட்டாம்பட்டி, இன்னாடு, சேராபட்டு, கரியாலூர் போன்ற பகுதிகள் மின்சாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கே தெருவிளக்குகள் எரியவில்லை. எனவே, மேற்கண்ட கிராமங்களுக்கு மின் விநியோகம் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

திரு. எஸ்.எம். கிருஷ்ணன்: A small clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே உங்களுக்கு கிளாரிபிகேஷன் வராது. இது கவன ஈர்ப்பு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப்பகுதியிலுள்ள 104 கிராமங்களில் 29 கிராமங்களுக்கு சூரியசக்தி தெருவிளக்குகளும், 8 கிராமங்களுக்கு டீசல் மின்சாரம் மூலம் தெருவிளக்குகளும், மீதமுள்ள 67 கிராமங்களுக்கு மரபுவழி மின்சார தெருவிளக்குகளும், (Street lights by Conventional electrification) என்ற முறையில் போடப்பட்டுள்ளன. மேற்கண்ட அனைத்து தெருவிளக்குகளும் சம்பந்தப்பட்ட ஊராட்சியால் பராமரிக்கப்படுகின்றன. மரபுவழி மின்சாரம் வழங்கப்படும் 67 கிராமங்களுக்கும் சங்கராபுரம் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது. சிலநேரங்களில் தவிர்க்க முடியாத காரணங்களினால் மலைப்பகுதியாக இருக்கின்றபோது, மின்சாரத் தடை ஏற்படுகின்றது. அப்படி ஏற்படுகின்ற நேரத்தில் மின்சார வாரியம் அந்தப் பகுதியிலே உடனடியாக நடவடிக்கை எடுத்து அதை நிவர்த்தி செய்திருக்கிறது. மற்ற நேரங்களில் மின்சாரம் தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றபோது நம்முடைய மின்சார வாரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. உடனடியாக மலைப்பகுதிகளிலே விரைந்து சென்று மின் இணைப்பை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று அரசின் சார்பிலே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதிக்கு, சங்கராபுரம் மின் இணைப்பு, ஈரோடு கிரிட்டிலிருந்து கொடுக்கப்படுவதாக கூறுகிறார்கள். ஆனால், ஈரோடு கிரிட்டினுடைய ஸ்விட்ச் கன்ட்ரோல் இராமகுண்டத்தில் இருப்பதாகச்

1995 ஏப்ரல் 10] [திரு. சி. இராமசுவாமி]

சொல்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற மின்சாரம், அதாவது எண்ணூர், கல்பாக்கம், ஆழியாறு, தும்பா, மேட்டூர், நெய்வேலி ஆகிய இடங்களில் உற்பத்தி செய்கிற மின்சாரத்தை இராமகுண்டம் கிரிட்டிற்கு அப்படியே அனுப்பிவிடுகிறார்கள். அவர்கள் அதிகமாக எடுத்துக்கொள்வதால், மின் தடை அடிக்கடி ஏற்படுகிறது. கல்வராயன் மலைப் பகுதியில் அதிகமாக ஏற்படுகிறது. எனவே; ஈரோடு கிரிட்டின் ஸ்விட்ச் கன்ட்ரோலை அதாவது, மெயின் கன்ட்ரோலை அங்கேயே இருக்க வழி செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதுசம்பந்தமாக ஒரு தெளிவான விளக்கத்தை இந்த அவையிலே வைத்திருக்கிறேன். ஆந்திரா பகுதியிலே அதிகமாக எடுக்கப்படுகின்ற மின்சாரத்தின் காரணமாக தமிழ்நாட்டிலே ஏற்படுகின்ற பிரச்சினை பற்றி இந்தச் சபையிலே மிகத் தெளிவாக நான் சொல்லியிருக்கிறேன். ஆனால், இப்போது அதை நாம் தனிமைப்படுத்த முடியாது. அது 4 மாநிலங்களை உள்ளடக்கிய பிரச்சினை. அதுசம்பந்தமாக உயர் அதிகாரிகள் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தற்போது சங்கராபுரம் துணைமின் நிலையத்திலிருந்து இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே மின்சாரத் தடையில்லாமல் பார்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலிருந்து மின்சாரம் கொடுக்கப்பட்டாலும், போதுமான மின்சாரம் கொடுக்கப்படுகின்றபோது தடை ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, இது பற்றி அரசு கவனத்தில் கொண்டிருக்கிறது. இனிமேல் இதுபோன்ற பிரச்சினை வராமல் அரசு நடவடிக்கை எடுக்கும். ஏற்கெனவே அறிவுரையும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 2-மாநில ஆயத் தீர்வைத் துறை-தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 15-காவல் துறை-தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 16-தீயணைப்புப் பணிகள்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மாண்புமிகு